# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

கதை தொகுப்பு

அடியேன்

கார்த்திகா சிவகுமார்



## 🍁🍁🍁🍁 காஞ்சி தேவப்பெருமாள் சொன்ன ஆறு வார்த்தைகள்:-

இளையாழ்வான் திருக்கச்சி நம்பிகளிடமே தன் பிரச்சினையைத் தீர்க்க உபாயம் சொல்ல வேண்டி வரதராஜரான தேவப்பெருமாளிடம் கேட்டுச் சொல்லும்படி சொல்ல, திருக்கச்சி நம்பிகளும் தேவப்பெருமாளுக்கு பரிவட்டம் வீசச் செல்லும் பொழுது கேட்பதாக உறுதியளித்தார்.

திருக்கச்சி நம்பிகள் வழக்கம்போல காஞ்சி பேரருளாளனுக்கு ஆலவட்டம் வீசும் பணியைச் செய்து முடித்தார். முடிந்ததும் உடனே கிளம்பாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தார். இதைக்கண்ட தேவப்பெருமாள் 'நீர் இன்னும் கிளம்பலையா? இங்கேயே நிற்கிறீர்? எதுவும் முக்கியமான விசயமா?' என்று தன் திருவாய் மலர்ந்தார். திருக்கச்சி நம்பிகளும் இளையாழ்வான் தன் சந்தேகத்தைத் தீர்க்கச் சொன்னதைப் பற்றி சொன்னார். அவருக்கு என்ன சந்தேகம்? எதில் சந்தேகம்? என்று புரியாதவாறு கேட்டார் மாயக்கண்ணன் தேவப்பெருமாள்.

திருக்கச்சி நம்பிகளும் இளையாழ்வானிடம் கேட்டால் உங்களுக்குத் தெரியும். தேவரீர் நிச்சயம் தீர்த்து வைப்பீர் என்று சொல்கிறார். நீரோ என்னிடம் என்னவென்று கேட்கிறீர்! என்றார்.

அப்போது எம்பெருமான் தேவப்பெருமாள், வரதராஜப் பெருமாள் இராமானுஜரின் மனதில் தோன்றிய கேள்விகளுக்கும், சந்தேகத்தையும் தீர்க்க திருக்கச்சி நம்பிகளிடம் தன் திருவாய் மலர்ந்து உரைத்தது.

🌱🌱 உரைத்த ஆறு :-

காஞ்சி வரதராஜப் பெருமாள் உரைத்த ஆறு விசயங்கள் புகழ்பெற்றவை.

திருக்கச்சி நம்பியிடம் இராமானுஜர் கீழ்க்காணும் நான்கு கேள்விகளைத் தம் பொருட்டுக் கேட்டார்.

1. உபாயங்களில் எது நல்லது?.
2. மோட்சம் அடைவதற்கு முன் அந்திமஸ்ருதி வேண்டுவது எப்போது?.
3. எந்த ஜென்மத்தில் மோட்சமடைவது?.
4. எந்த ஆச்சார்யரை நான் ஏற்றுக் கொள்வது?.

இக்கேள்விகளை இராமானுஜர் கேட்பதாக திருக்கச்சி நம்பிகள் தேவப்பெருமாளான வரதரிடம் கேட்க அவர் 6 வார்த்தைகள் பதில் கூறுகிறார்.

1. அஹம் மேவபரம்தத்வம்
2. தர்சனம் பேத ஏவச
3. உபாயேஷ் பேத ஏவச
4. அந்திமஸ்மருதி வர்ஜனம்
5. தேக வஸானே முக்தில் ஸ்யாத
6. பூர்ணசச்யார்ய ஸமாச்ரய

காஞ்சி வரதரான தேவப்பெருமாள் இவ்வாறு ஆறு வார்த்தைகள் உரைத்தார். அதன் விளக்கமானது :-

1. அஹம் மேவபரம்தத்வம் :-

நானே பரம்பொருள்.

ஸ்ரீமந் நாராயணனான நானே உலகிற்கும், உலக காரணிகட்கும் தத்துவமாய் விளங்கும் பரம்பொருள் என்பதாகும். முடிவான உண்மை நானே.

2. தர்சனம் பேத ஏவச :-

ஜீவாத்மா, பரமாத்மா (ஜீவன்-ஈஸ்வரன்) இரண்டும் வெவ்வேறானவை.

(ஜீவாத்மாக்களும்/அசேதனங்களும் என்னிலிருந்து வேறுபட்டவை. அவை என்னுடைய சரீரமாக விளங்குபவை).

நாம் எல்லாம் ஜீவாத்மா. எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஒருவரே பரமாத்மா.

3. உபாயேஷ் பரப்த்திய ஸ்யாத் :-

"என் ஒருவனையே தஞ்சமாகப் பற்றுவாய்" என்னிடத்தில் சரணம் அடைவது ஒன்றே என்னை அடைவிக்கும் வழி.

பகவானை அடைய (மோட்சம் அடைய) சரணாகதியே சிறந்தவழி. அதைத்தான் ப்ரபத்தியே உபாயம் என்பார்கள். எம்பெருமானிடம் நாம் "பூரண சரணாகதி" அடைந்தாலே போதும்.

4. அந்திமஸ்மருதி வர்ஜனம் :-

மரணத்தருவாயில் இருக்கும் சரணாகதர்களுக்கு, என்னைப்பற்றிய சிந்தனை கட்டாயமில்லை. வராஹ சரம ஸ்லோகத்தில் நானே அறிவித்தது போல, உன்னுடைய அந்திம காலத்தில் நானே உன்னைப்பற்றிய சிந்தனையை ஏற்கிறேன். (நம் ஸம்ப்ரதாயத்தில் ஆசார்யர்கள் நமக்கு காட்டிச்சென்ற இனிமையான பாதை – நாம் எல்லா நேரத்திலும் நம்முடைய ஆச்சார்யாரைப் பற்றியே சிந்தித்தபடி இருக்கவேண்டும்).

ஒரு மனிதனின் அந்திமகாலத்தில் பெருமாளை நினைக்க முடியாவிட்டால் தவறில்லை.

இந்த ஜீவனானது சரீரத்தில் இருக்கும் இளமைக் காலங்களில் எம்பெருமானைத் துதித்தால் போதும். ஆகையால் அந்திமக் காலத்தைப் பற்றி நினைக்காமல், நம்முடைய கடமையைச் செய்தும், இறைவனுக்குத் தொண்டு செய்யலாம்.

5. தேக வஸானே முக்தில் ஸ்யாத :-

சரணாகதர்கள் தற்போதுள்ள தங்களுடைய இந்த சரீரத்தின் முடிவிலேயே முடிவில்லாத பரமாத்மாவிற்கு கைங்கர்யம் செய்வதற்கான பரமபதத்தை அடைவர்.

என்னை உபாயமாகக் கொண்ட இத்தகைய பக்தர்கட்கு இந்தவுடல் கழிந்தவாறே (இப்பிறவி முடிந்ததும்) மோட்சம் நானே அருளுகிறேன்.

இறுதிக் காலத்தில் நாம் பகவானை நினைக்காமல் விட்டாலும் பகவான் நம்மைத் தேடி, இறுதிக்காலத்தில் வந்து நமக்கு "மோட்ச சாம்ராஜ்ஜியமான சரீர விடுதலை" அளிக்கிறார்.

6. பூர்ணசச்யார்ய ஸமாச்ரய :-

நற்குண பண்டிதராய் இருக்கும் மகா பூர்ணரான பெரிய நம்பியை ஆச்சார்யராக ஏற்றுக் கொள்வாயாக.

இவ்வாறு ஆறு வார்த்தைகள் உரைத்தார். இதைக்கேட்ட திருக்கச்சி நம்பிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். 'இளையாழ்வானோ ஆதிசேனின் அவதாரம், அவரோ உம்மிடம் கேட்காமல் என்னிடம் கேட்கிறார். நீரோ அவருக்கு எதையும் உணர்த்தாமல், என் மூலம் இளையாழ்வானின் சந்தேகங்களுக்கு விடையளித்து, கட்டளையிடுகிறீர். உங்கள் இருவருக்கும் இடையில் நானா! நான் பாக்கியம் பெற்றிருக்கிறேன்' என்று அருளாளப்பெருமாளிடம் கூறினார்.

திருக்கச்சி நம்பிகள் இளையாழ்வாரிடம் சென்று பகவானின் இந்த ஆறு கட்டளைகளையும் தெரிவித்தார்.

இளையாழ்வாரும் திருக்கச்சி நம்பிகளின் பேருதவிக்காக அவருக்கு நன்றி தெரிவித்தார். அதே சமயம் இளையாழ்வாரும் தன்னுடைய விருப்பமும் அதுவே என்று கூற, திருக்கச்சி நம்பிகள் பகவானின் திருவுள்ளமும் இளையாழ்வாரின் திருவுள்ளமும் ஒரே விதமாக இருப்பது கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

### ✿🍁 பெரியநம்பிகள் இளையாழ்வான் சந்திப்பு :-

திருக்கச்சி நம்பிகள் மூலம் பெரியநம்பிகளையே குருவாக ஏற்றுக்கொள்ளும்படி பேரருளாளன் இட்ட கட்டளையை மேற்கொண்டு, பெரியநம்பிகளை சந்திக்கப் புறப்பட்டார்.

இந்த சமயத்தில் திருவரங்கத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆளவந்தாரின் விசேஷ கடாக்ஷம் பெற்ற இளையாழ்வாரை அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்று பெரியநம்பிகளிடம் விண்ணப்பித்தனர்.

பெரியநம்பிகளும் அதனை ஏற்றுக் கொண்டு தன் மனைவியுடன் இளையாழ்வானைச் சந்திக்க புறப்பட்டுச் சென்றார்.

பெரியநம்பியும் அவரது மனைவியும் மதுராந்தகம் சென்றடைந்தனர். அங்கு எழுந்தருளியுள்ள ஏரிகாத்த பெருமாளின் சந்நிதியில், அவர்கள் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். இளையாழ்வானும் மதுராந்தகம் ஏரிகாத்த பெருமாளின்

கோவிலுக்கு வந்தார். பெரியநம்பிகளைச் சந்தித்தார். பெரியநம்பிகளும், இளையாழ்வானும் மகிழ்ந்தனர். பெரியநம்பிகளைச் சந்தித்தது பேரருளாளன் கருணையே என்று மகிழ்ந்த இளையாழ்வான் தன்னை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.

பெரியநம்பிகளும் இளையாழ்வானை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டார். பெரியநம்பிகள் காஞ்சிபுரம் சென்று பேரருளாளன் சந்நிதி முன்பு 'பஞ்ச சம்ஸ்காரம்' செய்து கொள்ளலாம் என்றார். இளையாழ்வானோ எனக்கு இவ்ளோ நாள் தவம் செய்து இப்போது தான் குருவாக தாம் கிடைத்திருக்கிறீர். காஞ்சிபுரம் செல்லலாம் என்றால், அதற்குள் என்ன நடக்கும் என்று தெரியாது. அதனால் இந்த மதுராந்தகத்திலேயே பஞ்சசம்ஸ்காரம் செய்யுமாறு வேண்ட, பெரியநம்பிகளும் ஏரிகாத்த ராமர் கோவிலிலுள்ள மகிழ மரத்தடிக்கு அழைத்துச் சென்று 'பஞ்சசம்ஸ்காரம்' செய்தார்.

✿✿ பஞ்சசம்ஸ்காரம் :-

பஞ்சசம்ஸ்காரம் என்பது ஸ்ரீவைஷ்ணவத்திலுள்ள முக்கிய சம்பிரதாயம் ஆகும்.

✿🍁 1. சங்கு, சக்கரம் :-

தீயிலிட்டு நன்கு பழுக்க காய்ச்சிய சங்கினை இடது தோளிலும், சக்கரத்தினை வலது தோளிலும் இடுவார்கள். பெரியநம்பிகள் இளையாழ்வானின் வலது, இடது தோளில் சக்கரம், சங்கினை இட்டார்.

✿❁ 2. திருமண் காப்பிடல் :-

சீடரின் நெற்றி, கழுத்து, மார்பு, முதுகு, தோள்பட்டை, வயிறு ஆகிய இடங்களில் 12 திருமண் காப்புகளை, விஷ்ணுவின் 12 சிறப்புப் பெயர்களைக்கூறி ஆச்சாரியர் காப்பிடுவார். பெரியநம்பிகள் இளையாழ்வானுக்கு திருமண் காப்பிட்டார்.

⚘❁ 3. தாஸ்யநாமம் சூட்டுதல் :-

ஆண் பக்தர்களுக்கு இராமானுஜ தாஸன் என்றும், பெண் அன்பர்களுக்கு இராமானுஜ தாசி என்று பெயரிடுவார்கள். விஷ்ணு பக்தரின் பிறப்புப்பெயர் வாசுதேவன் இருப்பின் வாசுதேவஇராமானுஜ தாசன் என்று பெயரிடுவார்கள். இராமானுஜர் தங்கள் தொடர்புடையவர் என்பதைக் குறிக்க இராமானுஜ தாஸ்யப் பெயர் புதிதாக ஆச்சாரியாரால் சூட்டப்படுகிறது.

ஆனால், இளையாழ்வானான இராமானுஜர் அவதரித்து வைஷ்ணவ ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் வரை "தாஸன்" "தாசி" என்ற திருநாமத்தை இட்டுக் கொள்வார்கள். "இளையாழ்வான் தாஸன்" என்ற திருநாமத்தை பெரியநம்பிகள் இளையாழ்வானுக்கு இட்டார்.

✿⚘ 4. மந்திரதீட்சை அளித்தல் :-

மூன்று தெய்வீக புனித இரகசியத் திரய மந்திரங்கள் (இரகசியத்திரயம்) எனும் எட்டெழுத்து மந்திரம், துய மந்திரம் மற்றும் சரம ஸ்லோகம் ஆகிய மந்திரத்தை தீட்சை பெறும் சீடரின் காதுகளில் மட்டும் கேட்கும்படி ஆச்சாரியார் மந்திர தீட்சை அளிப்பார்.

இளையாழ்வானின் காதில் துய மந்திரம், சரம ஸ்லோகம் மந்திரங்களை பெரியநம்பிகள் கூறினார். எட்டெழுத்து மந்திரம் இளையாழ்வான் திருக்கோஷ்டியூர் நம்பிகளிடம் கற்றார். அதைப் பற்றி பிறகு பார்க்கலாம்.


🌷🍁 5. யக்ஞம் :-

திருமாலை வழிபடும் முறைகள், உணவு நியமம் மற்றும் பிற வைஷ்ணவ அடியார்களுடன் நடந்து கொள்ளும் முறைகளை ஆச்சாரியன் சீடருக்கு விளக்குவார். இவற்றையெல்லாம் இளையாழ்வானுக்கு பெரியநம்பிகள் எடுத்துக் கூறினார்.

ஆளவந்தாரின் கருணை தம்மூலம் இளையாழ்வானுக்கு பிரகாசித்து அருளுகிறது என்று கூறி, சர்வமந்திரம், த்வயம் மந்திரம் அனைத்தையும் உபதேசித்தார் பெரியநம்பிகள்.

மந்திர ரத்தினத்தின் ரகஸ்யத்தைக் கேட்டு உய்ந்த இளையாழ்வான், குருவையும், அவர் பத்தினியையும் காஞ்சிபுரத்திற்கு அழைத்தார்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿



**தொடரும். . .**